I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.3
M.C.O.P.NO.266/2022(c/w.267/2022, 268/2022)

| | | |
|---|---|---|
| Name | : | Chitra |
| Husband Name | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.08.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :** 01.40 p.m

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. அதனால் இதிலுள்ள சங்கதிகள் எல்லாம் நான் கேள்விப்பட்டது தான். என் கணவர் travels. real estate business செய்ததாக சொல்லப்படுதவற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதே போல் அவருடைய வருமானத்தை காண்பிக்க வருமான வரி எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் வேலை எதுவும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள் இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. காரின் காப்பீட்டு நிறுவனமும் மற்றும் லாரியின் காப்பீட்டு நிறுவனமும் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

**4 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் கார் மீது தவறு என்று சொல்லவில்லை என்றால் சரிதான், நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் அனைத்து இடத்திலும் லாரி ஓட்டுனர் விபத்திற்கு

முழுக்க முழுக்க காரணம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் 4 வது எதிர்மனுதாரர் எதன் வகையில் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது 2 காப்பீட்டு நிறுவனமும் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னது யாரோ அறிவுறுத்தலின் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த வகையிலும் 4 வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்தவர் உமாசங்கர் என் கணவரின் நண்பர். அவரின் வாரிசுகள் மதுரை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் தெரியும். அந்த வழக்கு தீர்பான விவரம் எனக்கு தெரியும்.

அவர்களுக்கு இழப்பீடு கொடுக்க உத்தரவாகியுள்ளது என்றால் தெரியும். அந்த இழப்பீட்டில் இந்த மனுவில் கண்டுள்ள 1 மற்றும் 2 வது எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று தீர்பாகியுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. இந்த மனுவில் கண்டுள்ள 1 மற்றும் 2 வது எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று தீர்பாகியுள்ளது என்றாலும் 3 மற்றும் 4 வது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பாகியுள்ளது பற்றி தெரியாது என்று சொல்வது என்றாலும் இந்த வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 4 வது எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 01.50 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.